2002 அக்டோபர் 25]

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கம் வகிக்கின்ற மாவட்டமாக தேனி மாவட்டத்தில், தேனி தொகுதியில், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் கோயில் தேனி மாவட்ட மக்கள் வழிபடக்கூடிய முக்கியமான ஒரு கோயிலாகும். கோயிலில் உள்ள தேர் கடந்த பல ஆண்டுகளாக சீர் செய்யப்படாமல், இயங்காமல் இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் தற்போது மதிப்பீடு தயார் செய்து ஆய்வில் உள்ளது என்று கூறுகிறார். அது விரைந்து செயல்பட நடவடிக்கை எடுப்பார்களா என்பதை பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: கூடிய விரைவில் பணி தொடங்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

5—

கோயில் நிலங்கள்

***10108—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் நாகையகோட்டை, கோவிலூர் ஊராட்சிகளில் இன்னும் பல இடங்களில் கோயில் மானிய நிலமென்று ஒவ்வொரு தனி நபரும் 100, 50 ஏக்கர் நிலங்களை அனுபவித்தும், பிரித்தும் விற்பனை செய்து வருவதோடு சம்பந்தப்பட்ட கோயில்களுக்கு எண்ணெய் விளக்குகூட போடுவதில்லை. அந்த நிலங்களை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் உள்ள நாகையகோட்டை

மற்றும் வெம்பூர் ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட கிராமங்களில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் உள்ள 27 திருக்கோயில்களில், கோயிலூர் அருள்மிகு தட்சிண திருப்பதி வெங்கிடாசலபதி திருக்கோயிலுக்கு மட்டும் 50 ஏக்கருக்கு மேல் நிலங்கள் உள்ளன. இக்கோயில் நிலங்கள் தொடர்பாகவும் மற்ற கோயில் தொடர்பாகவும், தவறான பட்டா வழங்கல், ஆக்கிரமிப்பு போன்றவை உள்ளனவா என்பதை விரிவாக ஆய்வு செய்து அறிக்கை தரவும் இவ்விஷயமாக ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு, வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் முன்னிலையிலும் வழக்கு மற்றும் மேல்முறையீடுகள் நிலுவையில் உள்ளன. நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி பெறப்படும் தீர்ப்புகள் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கைகள் தொடரவும் சரக மற்றும் உதவி ஆணையருக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையகோட்டை, கோவிலூர் ஊராட்சிகளில் இருக்கின்ற கோயில் நிலங்களை எடுப்பதற்கான நடவடிக்கை சட்டபூர்வமாக எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். குறிப்பாக, வேடசந்தூர் வட்டம், நாகையகோட்டை ஊராட்சி செண்டுவழி என்ற ஒரு குக்கிராமத்தில் 22.35 ஏக்கர் வைத்துள்ள பொன்னுசாமி என்பவர் 2001 ஆம் ஆண்டு, முதலிலே எம்.பி. நிதியிலிருந்து ரோடு அமைப்பதற்காக சர்வே எண் 338, சர்வே எண் 389 என்ற இந்த இரண்டு நம்பர்களில் 30 செண்ட் நிலத்தை அரசாங்கம் எடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்தபோது அதற்குத் தடையாணை வாங்கிவிட்டார்கள். அந்த ஊருக்கு சாலை வசதி இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பல சர்வே நெம்பர்களில் அந்த நாகையகோட்டை பஞ்சாயத்தில் உள்ள ஒரே நபர், பொன்னுசாமி என்பவர் 58.42 ஏக்கரும், கோவிலூர் பகுதியில் இருந்து முனியாண்டிப்பிள்ளை என்பவர் 50.46 ஏக்கரும் வைத்திருக்கிறார்கள். இதை உடனடியாக அரசு எடுத்து, நிலமில்லாத ஏழைகளுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் பட்டா வழங்கி, வீடுகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வெம்பூர், தட்சிண திருப்பதி வெங்கிடாசலபதி திருக்கோயிலுக்கு இனாம் ஒழிப்புச்

2002 அக்டோபர் 25]

சட்டத்திற்கு முன்பு 45.83 ஏக்கர் நிலம் இருந்துள்ளது. இனாம் ஒழிப்புச் சட்டப்படி அந்நிலம் பலருக்கு வழங்கப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டில் பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில், இப்பொழுது 31 ஆண்டுகளுக்குப் பிறகு, மேற்படி பட்டா வழங்கியதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய இயலுமா என்பதைப் பற்றி வழக்கறிஞர்களிடம் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோன்று நாகையகோட்டை, அருள்மிகு மலைக்கன்னிமார் செண்டுவழி முனியாண்டி நாச்சிமுத்துசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 40 ஏக்கர் நிலத்தில், 16.32 ஏக்கர் தனியாருக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதைத் திரும்பப் பெற வழக்கறிஞரிடம் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் 1971 ஆம் ஆண்டில் பட்டா வழங்கியுள்ள நிலையில், 31 ஆண்டுகள் கழித்து நிலங்களைத் திரும்பப் பெறுவதில் சட்டச் சிக்கல் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது என்பதை பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் பல்வேறு இடங்களில் சில தனியாரிடத்திலே சிக்கிக்கொண்டு அந்தக் கோயிலுக்கு எந்தவித வருமானமும் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்கள் கிராமத்திற்கு அருகில் இருக்கிறபோது, இப்பொழுது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்குகிறோம், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குகிறோம். அப்படி ஆக்குகின்ற நேரத்தில், போதிய நிலங்கள் அந்தப் பள்ளிகளுக்கு இல்லையென்று வருகிறபோது, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், இப்படி கோயிலுக்குரிய நிலங்களில் எந்தவித வருவாயும் இல்லாது இருக்கிற நேரத்தில் ஒரு தொகையை கிராம மக்களே வசூல் செய்து அந்தப் பள்ளிகளை உருவாக்குவதற்கு, அந்த நிலங்களை எடுப்பதற்கு முன்வந்தால் அந்தத் தொகையை வங்கிகளிலே வைப்பீட்டுத் தொகையாக வைத்துகூட அந்தக் கோயில்களுக்கு வேண்டிய பணிகளைச் செய்ய முடியும் என்கிற காரணத்தால், அப்படி நிலங்களை எடுத்து கிராம மக்கள் பொது உபயோகத்திற்குத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இன்றைக்கு, அரசினுடைய பொது உபயோகத்திற்காக, அது கல்விக்கூடம் கட்டுவதற்காக இருந்தாலும் சரி, மருத்துவமனை

கட்டுவதற்காக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக இருந்தாலும் சரி அரசாங்கம் கேட்கின்ற நேரத்தில் அங்கிருக்கிற நில எடுப்பிற்கிணங்க அரசினுடைய அனுமதியைப் பெற்று, தமிழகத்தில் இருக்கிற அனைத்துப் பகுதிகளிலும் இப்படிப்பட்ட நிலங்களைக் கொடுப்பதற்கு அரசு முன்வந்து இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிறது. தாங்கள் கேட்கின்ற இடம் எங்கே என்று சொன்னால், அதற்குரிய தொகையைக் கட்டுவதற்கு நீங்கள் முன்வந்தால், நிச்சயமாக அறநிலையத் துறை மூலம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளிலே பல்வேறு கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் குத்தகை என்ற பெயராலே உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. ஓர் ஏக்கர் நிலம் ரூ.10 இலட்சம், ரூ.20 இலட்சம் என்று குத்தகைதாரர்கள் வாங்கிக் கொண்டு, திரும்பவும் குத்தகையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதையும், குறிப்பாக, பூவிருந்தவல்லி, திருமழிசை, திருநின்றவூர் ஆகிய இடங்களில் இருக்கின்ற கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் ஏக்கர் 20 இலட்சம், 25 இலட்சம் ரூபாய் என்று வாங்கிக் கொண்டு குத்தகை மாற்றம் செய்கிறார்கள். அந்த அதிகாரிகள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு இணங்க மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதையெல்லாம் கண்டறிவதற்காகத்தான் ஒரு புதிய ஐ.ஏ.எஸ். அலுவலரை அங்கே நியமித்து, எங்கெங்கே இப்படிக் காணாமல் இருக்கின்றதோ அந்த இடங்களையெல்லாம் கண்டுபிடித்து, உடனடியாக அறநிலையத் துறைக்கு எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, டாக்டர் க. பொன்முடி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.